**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.122/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சுமன்,<br>உதவி மருத்துவர் | Prosecution | LW-10 as PW-7. |
| Father Name | சிவக்குமார் | Defence | |
| Hospital | சீர்காழி GH | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 29/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>05.03.2026</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சீர்காழி GHயில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் சீர்காழி GHயில் பணியிலிருந்த உதவி மருத்துவர் சசிகலா என்பவரின் கையெழுத்தும் கையொப்பமும் நான் நன்கு அறிவேன். நீதிமன்றத்தின் அழைப்பாணையை ஏற்று மருத்துவர் சசிகலாவிற்காக நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 19.03.2024 அன்று உதவி மருத்துவர் சசிகலா சீர்காழிGH-யில் பணியிலிருந்த போது அன்றைய தினம் இரவு 9.50 மணியளவில் சீர்காழி அகனியை சேர்ந்த நாராயணசாமி மகன் மோகன் என்பவரும் கிருஷ்ணசாமி மகன் நாராயணசாமி என்பவரும் 19.03.2024 அன்று இரவு 7.00 மணிக்கு தன் வீட்டு வாசல் அருகில் அடையாளம் தெரிந்த ஒரு நபர் இரும்பு கம்பி மற்றும் கத்தியால் தாக்கியதாக சிகிச்சைக்கு சிவா என்பவரால் அழைத்து வரப்பட்டார்கள். அவர்களை பரிசோதனை செய்ததில்

1. மோகன் என்வருக்கு தலையின் வலது பக்கத்தில் சிதைவு ஏற்பட்டிருந்தது மற்றும் வலது முதுகு பகுதியில் துளையிடும் காயம்காணப்பட்டது (Puncture wound). அவரை உள்நோயாளியாக

சிகிச்சையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளிக்கப்பட்டது.

2. நாராயணசாமி என்பவருக்கு தலையின் வலது பக்கத்தில் சிதைவு ஏற்பட்டு இருந்தது மற்றும் வலது கையிலும் சிதைவு ஏற்பட்டு இருந்தது. அவரையும் உள்நோயாளியாக சிகிச்சையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று அளிக்கப்பட்டது.

மருத்துவர் சசிகலா காயம் பட்ட நபர்களுக்கு கொடுத்த விபத்து பதிவேட்டுடன் கூடிய **காயச்சான்றுகள் அசாஆ.2 மற்றும் அசாஆ.3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி வழக்கின் சான்றாவனங்கள் அனைத்தும் எனக்கு ஆவணங்களின் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் காயமுற்ற நபர்களுக்கு நான் சிசிக்சை அளிக்கவில்லை என்றாலும் சரிதான். காயம் பட்ட நபர்கள் எத்தனை மணிக்கு சிகிச்சையில் சேர்ந்தார்கள் என்றால் இரவு சுமார் 9.50 மணிக்கு. காயம் பட்ட நபர்களை யார் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றால் சிவா என்பவர் சேர்த்தார். காயம் பட்ட நபர்கள் எந்த வாகனத்தில் வந்து சேர்ந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாராயணசாமி என்பவர் காலையில் சிகிச்சைக்கு சேர்ந்தாரா என்றால் இல்லை.

கொடுங்காயம் பட்ட நபருக்கு ஏதேனும் X-ray எடுத்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. X-ray எடுத்தற்கோ CT-scan எடுத்ததற்கோ ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் இல்லாத போது காயம் பட்ட நபருக்கு கொடுங்காயம் என்று உறுதிபடுத்த முடியாது என்றால் சரிதான். காயம்பட்ட நபர்கள் எத்தனை நாட்கள் சீர்காழி Ghயில் இருந்தார்கள் என்ற விபரமோ மேல்சிகிச்சைக்கு சேர்ந்த விபரமோ எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட காயம் சிதைவு காயம் என்றால் சரிதான். மேற்படி சிதைவு காயங்கள் வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்து ஏற்பட கூடியது என்றால் சரிதான். Puncture wound யும் தடுமாறி கீழே விழந்து கூர்மையான ஆயுதங்களால் குத்தி ஏற்பட கூடியது என்றாலும் சரிதான். காயம் பட்ட நபர்கள் கத்தி மற்றும் இரும்பு கம்பியால் தாக்கப்பட்டதாக கூறினார்கள் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் கடப்பாறை, அறுவாள் போன்ற ஆயுதங்களால் தாக்கப்பட்டதாக கூறப்படவில்லை என்றால் சரிதான்.

நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணம் எதிரி சம்பவம் நடந்த அன்று 19.03.2024 ம்தேதி இரவு 8.50 மணிக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்பதற்கான ஆவணம் தான். அது என்னுடைய தலைமை மருத்துவர் வழங்கிய சான்று என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றியோ காயம் பட்ட நபர்கள் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் ஆவணங்கள் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**